# சமத்துவக்கட்சி

## யாப்பு விதிகள்

# SAMATHTHUVA KADCHI

## CONSTITUTION

# யாப்பு விதிகள்

# CONSTITUTION

1. கட்சியின் பெயர்

“சமத்துவக்கட்சி” என அழைக்கப்படும். SAMATHTHUVA KADCHI

2. கட்சியின் முகவரி

இலக்கம் 03. முதலாம் ஒழுங்கை கனகபுரம் கிளிநொச்சி கிளிநொச்சி மாவட்டம் இலங்கை
No 03. 1st Lane, Kanagapuram ,Kilinochchi, Kilinochchi District, Sri Lanka.
தொலைபேசி – 021 2285390, 0779322115

3. கட்சியின் கொடி

கட்சிக்காக தனியான கொடி ஒன்று இருக்கும் அது சிவப்பு மஞ்சள் வெள்ளை நிறங்களை சம அளவாகக் கொண்டு 2:1 என்ற நீள அகல அளவுத்திட்டத்தில் அமைந்திருக்கும்.

4. இலக்குகளும் நோக்கங்களும்

**4.1 தொலைநோக்கு (Vision)**

ஜனநாயக விழுமியங்களின் அடிப்படையிலான ஆட்சி முறை நிலவும் சமத்துவமும் சமூக நீதியும் சமாதானமும் சுபீட்சமும் நிறைந்த அபிவிருத்தியடைந்த பன்மைத்துவ இலங்கைத் தேசம்.

**4.2 பணி (Mission)**

அரசாங்கத்தின் பிரதான கூறுகளாக சட்டவாக்கத்துறை, நிர்வாகத்துறை நீதித்துறை என்பவற்றிலும் பொதுத்துறை நிர்வாகத்திலும் மற்றும் மாகாண சபைகள் உள்ளூராட்சி சபைகள், அவற்றின் கீழ் உள்ள நிர்வாக கட்டமைப்புக்கள் சிவில் சமூக அமைப்புக்கள் அனைத்திலும் சமத்துவம், சமூக நீதிக்கான கோட்பாடுகள், விழுமியங்கள், நடைமுறைகள் என்பவற்றை வினைத்திறனாகவும், விளைதிறனாகவும், பிரயோகிப்பதற்கும், செயல்படுத்துவதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல். இவற்றின் மூலம் சிறந்த சமூகத்தையும் இலங்கைத் தேசத்தையும் கட்டியெழுப்பல்.

**4.3 நோக்கங்கள் (Objectives)**

பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு கட்சி தனது அரசியல் செயற்திட்டங்களை கொண்டிருக்கும்

4.3.1 அறிவுபூர்வமாக சிந்தித்து அரசியலில் பங்கேற்பதற்கான அரசியல் விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தல்

4.3.2 சமத்துவம், சமூகநீதி அடிப்படையிலான ஜனநாயக அரசியல் சிந்தனைகளை மக்களிடையே பரவலாக்குவதும், ஊக்குவித்தலும், மேம்படுத்தலும்

4.3.3 நீதி, சுதந்திரம், சமத்துவம் ஆகியவற்றை நிலைபெறச் செய்தல் சமூகத்தின் தரப்பினருக்கு விசேடமாக நலிந்த பிரிவினருக்கும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் பணிசெய்தல்.

4.3.4.1 இனம், மதம், மொழி பால், சமூக வேறுபாடுகள் மற்றும் பிரதேச ரீதியான வேறுபாடுகளின்றி "நாம் இலங்கையர்" என்ற எண்ணக்கருவின் அடிப்படையில் மக்களிடையே தேசிய நல்லிணக்கத்தையும் ஒருமைப்பாட்டையும் உருவாக்கக் கூடிய அரசியல் சிந்தனைகளை உருவாக்கல். கலாசாரத்தை மேம்படுத்தல்.

4.3.4.2 தமிழ் பேசும் சமூகத்தின் இருப்பு அடையாளம், மேம்பாடு உரிமை ஆகியவற்றைப் பேணி ஏனைய சமூகங்களிற்கு இணையான சமத்துவ தன்மையை உறுதிப்படுத்தல்.

4.3.4.3 அரசியலை ஒரு சமூக பொறுப்புணர்ச்சியாகவும் தேசிய கடமையாகவும், செயற்படக்கூடியவர்களாக கட்சியின் அங்கத்தவர்களையும் ஆதரவாளர்களையும் பயிற்றுவித்தல் உருவாக்கல்.

4.3.4.4 அரசியல் அதிகாரத்தை மக்கள் நலனுக்காக மாத்திரம் பயன்படுத்தும் பொறுப்புணர்வும் கடமையுணர்வும் மிக்க மக்கள் பிரதிநிதிகளை உருவாக்கல்.

4.3.4.5 நாட்டின் பொது நன்மைகளுக்காகவும், பொது இலக்குகளுக்காகவும், விழுமிய அடிப்படையில் செயற்படும் முற்போக்கான அரசியல் கட்சிகள் தொழில் சங்கங்கள், சிவில் சமூக அமைப்புக்களுடன் இணைந்தும் ஒத்துழைத்தும் செயற்படல்.

4.3.4.6 கலந்தாலோசனை, கூட்டுப்பொறுப்பு, வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், போன்ற சமத்துவம், சமூகநீதி விழுமியங்களின் அடிப்படையில் செயற்படக்கூடிய நிர்வாகத்தையும், தலைமைத்துவத்தையும் கட்சியின் அனைத்து மட்டங்களிலும் ஏற்படுத்தல்.

4.3.4.7 ஊழல் மோசடி, வீண்விரயம், அதிகார துஷ்பிரயோகம், இலஞ்சம், வன்முறையை தூண்டல், பக்கச்சார்பாக செயற்படத் தூண்டல், உள்ளிட்ட சமூக விரோத செயல்களுக்கு எதிராக செயற்படல்.

4.3.4.8 மக்களின் தேவைகளை மையப்படுத்தி நாட்டின் வளங்களை திட்டமிட்ட அடிப்படையில் வினைத்திறனாகவும், விளைதிறனாகவும் பயன்படுத்தி நிலையான அபிவிருத்தியை ஊக்கவித்தலும், முன்னெடுத்தலும்.

4.3.4.9 சமாதானம் சமத்துவம் சகவாழ்வின் ஊடாக அபிவிருத்தியடைந்த பன்மைத்துவ இலங்கைத் தேசத்தைக் கட்டியெழுப்புதல்.

4.3.4.10 இயற்கை மற்றும் சுற்றுச்சூழலுக்கு எதிரான செயற்பாடுகளை தடுத்தல், பாதுகாத்தல்

## 5 வழிமுறை (Methodology)

நாட்டின் சட்டங்களையும், ஒழுங்குகளையும் மதித்து, ஜனநாயக வழிமுறைகளையும் நல்லாட்சிக்குரிய விழுமியங்களையும் பின்பற்றி கட்சியின் அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்தல்.

## 6. அங்கத்துவம் (Membership)

6.1 அங்கத்துவ தகைமைகள்

6.1.1 கட்சியின் நோக்கங்களையும் செயற்திட்டங்களையும் எற்றுக் கொள்ளும் 18 வயதைப் பூர்த்தி செய்த இலங்கைப் பிரஜைகள் விண்ணப்பிப்பதன் மூலம் ஆண், பெண் இருபாலாரும் இணைந்து கொள்ள முடியும்.

6.1.2 ஆங்கத்தவர்களாக இணைந்து கொள்ளும் ஒவ்வொருவரும் சாதாரன அங்கத்தவராகவும் ஆயட்கால அங்கத்தவர்களாகவும் இணைத்துகொள்ளபடுவர்.

6.1.3 வருடாந்தம் ரூபா ஐந்நூறு (Rs.500) செலுத்துவதன் மூலம் சாதாரண அங்கத்தவராகவும் ரூபா ஐயாயிரம் (Rs.5000/=) ஒரே தடவையில் செலுத்துவதன் மூலம் ஆயுட்கால அங்கத்தவராகவும் இணைந்துகொள்ளமுடியும்.

6.1.4 அவ்வாறு இணைந்து கொள்பவர்கள் மற்றுமொரு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றில் அங்கத்தவராகவோ அல்லது கட்சியின் கொள்கைகளுக்கும் நோக்கங்களுக்கும் முரண்படும் ஏதாவதொரு அமைப்பின் அல்லது நிறுவனத்தின் அங்கத்தவராகவோ இணைந்து கொள்ள முடியாது.

6.1.5 ஊழல், மோசடி, இலஞ்சம் வன்முறை, ஒழுக்கசீர்கேடு, போன்ற சமூக விரோத செயல்களில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டு இலங்கை நீதிமன்றத்தால் தண்டனை பெற்றவராகவோ ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு உட்பட்டவராகவோ சமூகத்தால் நிராகரிக்கப்பட்டவராகவோ இருக்கக்கூடாது.

### 6.2. அங்கத்துவ வகைகள் (Categories of Membership)

6.2.1 ஸ்தாபக அங்கத்தவர்கள் (Founder Members)

6.2.2. ஆரம்ப அங்கத்தவர்கள் (Primary Members)

6.2.3 இணை அங்கத்தவர்கள் (Associate Members)

6.2.4 செயற்பாட்டு அங்கத்தவர்கள் (Active Members)

6.2.5 கௌரவ அங்கத்தவர்கள் (Honorary Members)

**6.3 ஸ்தாபக அங்கத்தவர்கள் (Founder Members)**

6.3.1 கட்சியின் உருவாக்கத்திலும் அதன் வளர்ச்சியிலும் அர்ப்பணிப்புடனும் தொடர்ச்சியாகவும் செயற்பட்டுவரும் சிரேஷ்ட அங்கத்தவர்கள் தலைமைத்துவ சபையினால் உறுதி செய்யப்பட்டு ஸ்தாபக அங்கத்தவர்களாக அங்கீகரிக்கப்படுவர்.

6.3.2 ஸ்தாபக அங்கத்தவர்கள் கட்சியின் நிரந்தர அங்கத்தவர்களாக இருப்பதுடன் கட்சியின் நிர்வாகக் கட்டமைப்பிலுள்ள தலைமைத்துவ சபை, முகாமைத்துவ குழு, அரசியல் குழு போன்றவற்றில் முக்கிய பதவிகளை வகிப்பவர்களாகவும் செயல்படுவர்.

6.3.3 கட்சியின் உள்ளக தேர்தல்களிலும் தலைமைத்துவச் சபை அவசியம் எனக்கருதும் விடயங்களிலும் ஸ்தாபக அங்கத்தவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை உண்டு.

**6.4 ஆரம்ப அங்கத்தவர்கள் (Primary Members)**

6.4.1 அங்கத்துவ தகைமைகளைப் பெற்றவர்களாக கட்சியின் ஆரம்ப அங்கத்தவராகஇ இணைந்து கொள்வதற்கு விண்ணப்பிக்க முடியும்.

6.4.2 இவ்வாறான விண்ணப்பங்கள் வட்டார அல்லது கிராம அல்லது நகர அல்லது உள்ளுராட்சிமன்ற அல்லது மாவட்ட செயற்குழுவினால் பரிசீலிக்கப்பட்டு தேசிய அங்கத்துவ குழுவிற்கு சமர்ப்பிக்கப்படல்

6.4.3 இவ்வாறு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் தேசிய அங்கத்துவக் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் பட்சத்தில் குறித்த விண்ணப்பதாரிகள் கட்சியின் ஆரம்ப அங்கத்தவராக இணைத்துக் கொள்ளப்படுவார்.

6.4.4 கட்சியின் உள்ளக தேர்தல்களிலோ முக்கிய தீர்மானங்களிலோ ஆரம்ப அங்கத்தவர்களுக்கு வாக்களிக்கும் உரிமையில்லை.

**6.5 இணை அங்கத்தவர்கள் (Associate Members)**

6.5.1 ஆரம்ப அங்கத்தவர் ஒருவர் தான் ஆரம்ப அங்கத்தவராக இணைத்துக் கொள்ளப்பட்டதிலிருந்து ஒரு வருடத்திற்குப் பின்னர் இணை அங்கத்தவருக்கு விண்ணப்பிக்க தகுதிபெறுவர்

6.5.2 இணை அங்கத்தவருக்கு விண்ணப்பிக்கும் ஒருவர் தனது விண்ணப்பத்தை வட்டார அல்லது கிராம அல்லது நகர அல்லது உள்ளூராட்சிமன்ற அல்லது மாவட்ட செயற்குழுவினூடாக தேசிய அங்கத்துவ பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

6.5.3 தேசிய அங்கத்துவ குழுவின் சிபார்சின் பிரகாரம் தலைமைத்துவ சபை இணை அங்கத்துவ விண்ணப்பங்கள் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளும்.

6.5.4 வட்டார அல்லது கிராம அல்லது நகர அல்லது உள்ளூராட்சிமன்ற மட்டத்திலான கட்சியின் உள்ளக தேர்தல்களிலும் முக்கிய தீர்மானங்களின் போது வாக்களிக்கும் உரிமை இணை அங்கத்தவர்களுக்கு உண்டு.

## 6.6 செயற்பாட்டு அங்கத்தவர்கள் (Active Members)

6.6.1 இணை அங்கத்தவராக இணைத்துக் கொள்ளப்பட்ட ஒருவர் கட்சியின் கொள்கைகள், விழுமியங்கள், நடைமுறைகள் இலக்குகள் மற்றும் அரசியல் கலாசாரம் என்பவற்றை மனப்பூர்வமாக எற்று கட்சியின் செயற்பாடுகளில் குறைந்தது மூன்று (03) வருடங்கள் ஆர்வத்துடனும் தொடர்ச்சியாகவும் ஈடுபடும் ஒருவர் செயற்பாட்டு அங்கத்தவராக இணைத்துக்கொள்ளப்படுவார்.

6.6.2 அங்கத்துவ குழுவின் சிபார்சின் பிரகாரம் தலைமைத்துவ சபை செயற்பாட்டு அங்கத்தவர்களின் விண்ணப்பங்கள் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளும்.

6.6.3 செயற்பாட்டு அங்கத்தவர்களே கட்சியின் பதவிகளுக்கும் பொறுப்புக்களுக்கு அமர்த்தப்படுவதற்கும் தகைமையுடையோர் கட்சியினால் மேற்கொள்ளப்படும் முக்கிய தீர்மானங்களின் போதும் உள்ளக தேர்தல்களிலும் வாக்களிக்கும் உரிமை செயற்பாட்டு அங்கத்தவர்களுக்கு உண்டு.

## 6.7 கௌரவ அங்கத்தவர்கள் (Honorary Members)

6.7.1 கட்சியின் செயற்திட்டங்களுக்கு வளம் சேர்க்கக்கூடிய நிபணத்துவ பங்களிப்பு வழங்கக்கூடியோர் கௌரவ அங்கத்தவர்களாக இணைத்துக் கொள்ளப்படுவர். தலைமைத்துவ சபை அங்கத்தவர்களின் பிரேரணையின் பேரில் இவர்களின் அங்கத்துவத்தை தலைமைத்துவ சபை அங்கீகரிக்கும்.

6.7.2 இவ்வாறு இணைத்துக்கொள்ளப்படும் கௌரவ அங்கத்தவர்கள் வாக்களிக்கும் உரிமை கொண்ட அங்கத்தவர்களாக அல்லாமல் கட்சியின் விரிந்த நோக்கங்களுக்கும் செயற்பாடுகளுக்கும் அனுசரணை வழங்குபவராக இருப்பர்.

6.8 அங்கத்துவம் இழத்தல் / அங்கத்துவம் வறிதாதல்

பின்வரும் சந்தர்ப்பங்களில் ஒருவரது அங்கத்துவம் இழக்கப்படும். அல்லது வறிதாகும் இது ஸ்தாபக அங்கத்தவர்களுக்கும் பொருந்தும்.

6.8.1 இறப்பு

6.8.2 இராஜினாமா

6.8.3 ஒழுக்காற்று நடவடிக்கையின் மூலம் கட்சியின் அங்கத்துவத்தில் இருந்து நீக்கப்படல்

6.8.4 முன்னனுமதியின்றி வேறொரு அரசியல் கட்சியில் இணைந்து கொள்ளல்

6.8.5 ஊழல் மோசடி, இலஞ்சம், வன்முறை, ஒழுக்கசீர்கேடு போன்ற சமூக விரோத செயல்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்றத்தினால் அல்லது கட்சியின் நிறைறேற்றுக்குழுவினால் தண்டனை வழங்கப்படடிருத்தல்.

7 நிர்வாகக் கட்டமைப்பு **(Organizational Structure)**

7.1 நிர்வாகக் கட்டமைப்பின் அலகுகள் (Units of Organizational Structure)

**7.1.1** தலைமைத்துவ சபை (Leadership Council)

**7.1.2** முகாமைத்துவக் குழு (Management Committee)

**7.1.3** அரசியல் விவகாரக் குழு (Political Affairs Committee)

**7.1.4** அங்கத்துவக் குழு (Membership Committee)

**7.1.5** பேராளர் குழு (Delegates.Assembly)

**7.1.6** தேசிய செயற்குழு (National Working Committee)

**7.1.7** மாவட்ட செயற்குழு (District Working Committee)

**7.1.8** கிராம / நகர / உள்ளூராட்சிமன்ற செயற்குழு (Village / City / LGA leval Working Committee)

**7.1.9** வட்டார செயற்குழு (Ward Leval Working Committee)

**7.1.10** அனைத்து நிர்வாக கட்டமைப்புகளிலும் பெண்களின் பிரதிநிதித்துவம் 25 வீதத்திற்கு குறையாமல் இருத்தல் வேண்டும்

7.1.11 அனைத்து நிர்வாக கட்டமைப்புகளிலும் 18வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட இளையோர்களின் பிரதிநிதித்துவம் ( ஆண் பெண்) 10% வீதத்திற்கு குறையாமல் இருத்தல். வேண்டும்

7.2 தலைமைத்துவ சபை (Leadership Council) தலைமைத்துவ சபையே முன்னணியின் அதியுயர் சபையாகும்.

7.2.1 தலைமைத்துவ சபையின் கட்டமைப்பு

7.2.1.1 இச்சபை பதினைந்து (15) உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்படும். இதில் குறைந்தபட்சம் மூன்றில் இரண்டு (2/3) பங்கு உறுப்பினர்கள் ஸ்தாபக அங்கத்தவர்களது பெயர்பட்டியலிலிருந்து ஸ்தாபக அங்கத்தவர்கள் வாக்களிப்பதன் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

7.2.1.2 ஸ்தாபக அங்கத்தவர்களிலிருந்து தலைமைத்துவ சபைக்குத் தெரிவு செய்யப்பட்டோர் தலைமைத்துவ சபையின் மீதியாக உள்ள மூன்றிலொன்று பங்கு (1/3) அங்கத்தவர்களை ஸ்தாபக அங்கத்தவர்களிலிருந்து அல்லது செயங்பாட்டு அங்கத்தவர்களிலிருந்து வாக்களிப்பின் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

7.2.1.3 தலைமைத்துவ சபையின் பதவிக்காலம் நான்கு (04) வருடங்களாகும்.

7.2.1.4 தலைமைத்துவ சபையின் பதவிநிலை உத்தியோகத்தராக (office Bearers) பின்வருவோர் ஏகமனதாக அல்லது வாக்களிப்பதன்மூலம் தெரிவு செய்யப்படுவர்.

1. தவிசாளர் (Chairman)
2. பொதுத் செயலாளர் (General Secretary)
3. பொருளாளர் (Treasurer)
4. பிரதி தவிசாளர் (Deputy Chairman)
5. உதவிச் செயலாளர் (Assistant Secretary)
6. உதவிப்பொருளாளர் (Assistant Treasurer)
7. தேசிய அமைப்பாளர் (National Organizer)

### 7.2.2 தலைமைத்துவ சபையின் பொறுப்புகள்

7.2.2.1 கட்சியின் கொள்கைகளை வகுத்தலும் வழிகாட்டல் தத்துவங்களை வடிவமைத்தலும்

7.2.2.2 மூலோபாய வருடாந்த திட்டங்களை அங்கீகரித்தலும் கருத்திட்டங்களை உருவாக்கலும்

7.2.2.3 வரவு செலவுத்திட்டத்தை அங்கீகரித்தல்

7.2.2.4 கட்சியின் சொத்துக்களை பராமரித்தலும் நிதி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தலும்

7.2.2.5 கட்சியின் தீர்மானங்களை நிறைவேற்றுதலும் இறுதி அனுமதி வழங்குதலும்

7.2.2.6 கட்சியின் செல்நெறியைத் தீர்மானித்தல்

7.2.2.7 அரசியல் வியூகங்களை வகுத்தல்

## 7.3 முகாமைத்துவக் குழு (Management Committee)

### 7.3.1 முகாமைத்துவக் குழுவின் கட்டமைப்பு

7.3.1.1 குறைந்த பட்சம் ஐந்து (5) அங்கத்தவர்களைக் கொண்டு அமைந்திருக்கும்.

7.3.1.2 முகாமைத்துவ குழுவிற்கான அங்கத்தவர்கள் பதவிநிலை, உத்தியோகத்தர்களில் இருந்து தலைமைத்துவ சபையினால் தெரிவு செய்யப்படுவார்.

7.3.1.3.1 முகாமைத்துவ குழுவின் பதவிக்காலம் இரண்டு வருடங்கள் ஆகும்.

### 7.3.2 முகாமைத்துவக் குழுவின் பொறுப்புக்கள்

7.3.2.1 தலைமைத்துவ சபையினால் மேற்கொள்ளப்படும் கொள்கைகள், திட்டமிடல்கள், தீர்மானங்களை எதிர் பார்க்கப்படும் விளைவுகளை அடையும் பொருத்தமான முறையில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தல்

7.3.2.2.1 கட்சியின் அனைத்து நிர்வாக நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாக செயற்படலும் மேற்பார்வை செய்தலும்

## 7.4 அரசியல் விவாகரக்குழு (Political Affairs Committee)

7.4.2 இது தலைமைத்துவ சபையினால் நியமிக்கப்படும்

7.4.3 இதன் எண்ணிக்கை காலத்திற்குக் காலம் தலைமைத்துவ சபையினால் தீர்மானிக்கப்படும்

7.4.4 அரசியல் விவகாரக் குழுவின் பதவிக்காலம் இரண்டு (2) வருடங்களாகும்.

7.4.5 கட்சியின் அரசியல் விவகாரங்களை ஒருங்கிணைத்து செயற்படுத்தும் குழுவாகவும் தலைமைத்துவ சபைக்கு அவசியமான அரசியல்சார் ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் காலத்திற்குக் காலம் வழங்கும்.

## 7.5 அங்கத்துவக்குழு (Membership Committee)

7.5.2 இது தலைமைத்துவ சபையினால் நியமிக்கப்டும்

7.5.3 இதன் எண்ணிக்கை காலத்திற்குக் காலம் தலைமைத்துவ சபையினால் தீர்மானிக்கப்படும்.

7.5.4 அங்கத்துவக் குழுவின் பதவிக்காலம் இரண்டு (2) வருடங்கள் ஆகும்.

7.5.5 கட்சியின் அங்கத்துவ விவகாரங்களை ஒருங்கிணைத்து செயற்படுத்தும் குழுவாகவும், தலைமைத்துவ சபைக்கு அவசியமான அங்கத்துவம்சார் பிரேரணைகளையும் ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் காலத்திற்குக் காலம் வழங்கும்.

## 7.6 பேராளர் அவை (Delegates Assembly)

7.6.1 பேராளர் அவையின் கட்டமைப்பு

7.6.1.1 இது தலைமைத்துவ சபையினால் நியமிக்கப்டும்

7.6.1.2 இதில் ஸ்தாபக அங்கத்தவர்கள் அனைவரும் அங்கத்தவர்களாக அங்கம் வகிப்பார்

7.6.1.2.1.1 இதன் எண்ணிக்கை காலத்திற்குக் காலம் தலைமைத்துவ சபையினால் தீர்மானிக்கப்படும்

7.6.1.2.1.2 பேராளர் அவையின் பொறுப்புக்கள்

7.6.1.2.1.3 முன்னணியின் பொது விவகாரங்களை ஒருங்கிணைத்து செயற்படுத்தும் அவையாகவும், தலைமைத்துவ சபைக்கு அவசியமான பிரேரணைகளையும் ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கும் அவையாகவும் செயற்படல்.

7.6.1.3 கட்சியின் யாப்பினை அங்கீகரிப்பதும் திருத்தம் செய்வதும் பேராளர் அவையின் பெரும்பான்மை தீர்மானத்தின் அடிப்படையில் செல்லுபடியாகும்.

## 7.7 தேசிய செயற்குழு (National Working Committee)

கட்சியின் தேசிய அளவிலான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து செயற்படுத்தும் குழுவாக தேசிய செயற்குழு அமைந்திருக்கும்.

7.7.1 தேசிய செயற்குழுவின் கட்டமைப்புக்களும் பொறுப்புக்களும்

7.7.1.1 தேசிய செயற்குழுவானது கட்சியின் தலைமைத்துவ சபையிலுள்ள பதவிநிலை அங்கத்தவர்களையும், மாவட்ட பிரதிநிதிகள், பெண்கள் மற்றும் கட்சியின் ஏனைய அணியின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கியதாக இருக்கும்.

7.7.1.2 தேசிய செயற்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை அங்கத்துவ வகை ஆகியன காலத்திற்குக் காலம் தேவைக்கேற்ப தலைமைத்துவ சபையினால் நிர்ணயிக்கப்படும்.

7.7.1.3 தேசிய செயற்குழுவின் பதவிக்காலம் இரண்டு (2) வருடங்களாகும்.

## 7.8 மாவட்ட செயற்குழு (District Working Committee)

குறித்ததொரு மாவட்டத்தில் கட்சியின் செயற்பாடுகளுக்கு ஏற்ப மாவட்ட செயற்குழுக்கள் அமைக்கப்படும்.

### 7.8.1 மாவட்ட செயற்குழுவின் கட்டமைப்பும் பொறுப்புக்களும்

**7..8.1.1** மாவட்ட செயற்குழுக்கள் அமைக்கப்படுவதற்கு குறித்தமாவட்டத்தில் குறைந்த பட்சம் மூன்று (3) செயற்பாட்டு அங்கத்தவர்களும் ஏழு (7) இணை அங்கத்தவர்களும் இருக்க வேண்டும்.

**7.8.1.2** மாவட்ட செயற்குழுவின் உறுப்பினர்களின் அதிகூடிய எண்ணிக்கை பதினைந்தாகும் (15)

**7.8.1.3** மாவட்ட செயற்குழுவின் பதவிக்காலம் ஒரு (1) வருடமாகும்.

**7.8.1.4** மாவட்ட ஒருங்கிணைப்பாளர், செயலாளர், பொருளாளர் ஆகிய பதவிகள் மாவட்ட செயற்குழுவில் காணப்படும் ஏனைய பதவிகளை தேவைக்கு ஏற்ப தலைமைத்துவ சபையினன் அங்கீகாரத்துடன் உருவாக்கிக்கொள்ள முடியும்.

**7.8.1.5** கட்சியின் மாவட்ட மட்ட நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து செயற்படுத்தும் குழுவாக மாவட்ட செயற்குழு அமைந்திருக்கும்.

**7.9** கிராம அல்லது நகர அல்லது உள்ளுராட்சி மன்ற செயற்குழு (Villlage /City/ Local Government level Working Committee) குறித்ததொரு கிராமத்தில் அல்லது நகரில் கட்சியின் செயற்பாடுகளுக்கு ஏற்ப கிராம அல்லது நகர அல்லது உள்ளுராட்சி மன்ற செயற்குழுக்கள் அமைக்கப்படும்.

**7.9.1** கிராம அல்லது நகர அல்லது உள்ளுராட்சி மன்ற செயற்குழுகட்டமைப்பும் பொறுப்புக்களும்

**7.9.1.1.1.1** கிராம அல்லது நகர அல்லது உள்ளுராட்சி மன்ற செயற்குழுக்கள் அமைக்கப்படுவதற்கு குறித்த பிரதேசத்தில்

குறைந்து மூன்று (3) இணை அங்கத்தவர்கள் இருக்க வேண்டும்.

**7.9.1.1.1.2** கிராம அல்லது நகர அல்லது உள்ளூராட்சி மன்ற செயற்குழு உறுப்பினர்களின் அதிகூடிய எண்ணிக்கை பதினொன்று (11) ஆகும்.

**7.9.1.1.1.2.1** கிராம அல்லது நகர அல்லது உள்ளூராட்சி மன்ற செயற்குழு பதவிக்காலம் (1) வருடமாகும்.

**7.9.1.1.1.3** கிராம அல்லது நகர அல்லது உள்ளூராட்சி மன்ற ஒருங்கிணைப்பாளர் செயலாளர், பொருளாளர், ஆகிய பதவிகள் கிராம அல்லது நகர அல்லது உள்ளூராட்சி மன்ற செயற்குழுவில் காணப்படும். ஏனைய பதவிகளை தேவைக்கேற்ப தலைமைத்துவ சபையின் அங்கீகாரத்துடன் உருவாக்கிக்கொள்ள முடியும்.

**7.9.1.1.1.4** கட்சியின் கிராம அல்லது நகர அல்லது உள்ளூராட்சி மன்ற மட்டத்திலான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து செயற்படுத்தும் குழுவாக கிராம அல்லது நகர அல்லது உள்ளூராட்சி மன்ற செயற்குழு அமைந்திருக்கும்.

**7.9.1.1.1.5** வட்டார செயற்குழு (Ward Level Working Committee)

குறித்த வட்டாரத்தில் முன்னணியினன் செயற்பாடுகளுக்கு ஏற்ப வட்டார செயற்குழுக்கள் அமைக்கப்படும்.

**7.9.1.1.1.6** வட்டார செயற்குழுவின் கட்டமைப்புக்களும் பொறுப்புக்களும்

**7.9.1.1.1.7** வட்டார செயற்குழுக்கள் அமைக்கப்படுவதற்கு குறித்த பிரதேசத்தில் குறைந்தது மூன்று (3) ஆரம்ப அங்கத்தவர்கள் இருக்க வேண்டும்.

**7.9.1.1.1.8** வட்டார செயற்குழுக்களின் உறுப்பினர்களின் அதிகூடிய எண்ணிக்கை ஏழாகும். (7)

**7.9.1.1.1.9** வட்டார செயற்குழுவின் பதவிக்காலம் ஒரு (1) வருடமாகும்.

**7.9.1.1.1.10** வட்டார ஒருங்கிணைப்பாளர், செயலாளர், பொருளாளர் ஆகிய பதவிகள் வட்டார செயற்குழுவில் காணப்படும்

ஏனைய பதவிகளை தேவைக்கு ஏற்ப தலைமைத்துவ சபையின் அங்கீகாரத்துடன் உருவாக்கிக் கொள்ள முடியும்.

7.9.1.1.1.11 கட்சியின் வட்டார மட்டத்திலான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து செயற்படுத்தும் குழுவாக வட்டார செயற்குழு அமைந்திருக்கும்.

7.11. பதவி நிலைகளும் பொறுப்புகளும்.

7.11.1. தவிசாளர் (Chairman)

7.11.1.1 கட்சியை தலைமை தாங்கி வழி நடத்துவதுடன் கட்சியின் நோக்கங்களையும் திட்டங்களையும் தலைமைத்துவ சபையினூடாக வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லல்

7.11.1.2 எந்தவொரு தீர்மானத்தையும் மேற்கொள்ளும் போது பொதுவாக முகாமைத்துவ குழுவுடன் கலந்தாலோசித்தே மேற்கொள்ள வேண்டும் இருப்பினும் கட்சி தொடர்பான அதி முக்கியத்துவம் வாய்ந்த அல்லது தீர்க்கமான முடிவுகளை எடுக்கும்போது கண்டிப்பாக தலைமைத்துவ சபையுடன் கலந்தாலோசித்தே தீர்மானம் மேற்கொள்ளவேண்டும்.

7.11.1.3 முகாமைத்துவ சபைக்கு தலைமைதாங்கி வழிநடாத்தல்.

**7.11.2 பிரதி தவிசாளர் (Deputy Chairman)**

7.11.2.1 தலைமைத்துவ சபையை வழிநடத்துவதற்கு தவிசாளருக்கு உதவியாக செயற்படல்

7.11.2.2 தலைமைத்துவ சபையால் பணிக்கப்படும் விடயங்களையும் பொறுப்புகளையும் கடமைகளையும் கட்சி சார்பாக முன்னெடுத்துச் செல்லல்.

7.11.2.3 தவிசாளர் இல்லாத சந்தர்ப்பங்களில் அவரின் பொறுப்புக்களையும் கடமைகளையும் முன்னெடுத்துச் செல்லல்

30

### 7.11.3 பொதுச் செயலாளர் (General Secretary)

7.11.3.1 கட்சியின் தலைமைத்துவ சபையினால் எடுக்கப்படுகின்ற தீர்மானங்களை நடைமுறைப்படுத்துதல்

7.11.3.2 தலைமைத்துவ சபை நிறைவேற்றுக்குழு தேசிய செயற்குழு ஆகியவற்றை ஒன்றுகூட்டுதலும் அவற்றிக்கான அழைப்பை விடுத்தலும்

7.11.3.3 தலைமைத்துவ சபையின் வழிகாட்டலில் எல்லாவிதமான கூட்டங்களினதும் நிகழ்ச்சி நிரல்களைத் தயாரிதிதல் கூட்ட அறிக்கைகளைத் தயாரித்தல் உள்ளக வாக்கெடுப்பு நடைபெறுகின்ற சந்தர்ப்பங்களில் வாக்கெடுப்புகளை நடாத்தல்.

7.11.3.4. சகல கடித தொடர்புகளையும் கட்சியின் கொள்கைக்கு அமைய மேற்கொள்ளல்

7.11.3.5 சட்டரீதியாக செல்லுபடியாகும் விடயங்கள் தொடர்பான ஆவணங்கள்,தேர்தல்கள் ஆணைக்குழுவுடனான ஆவணங்கள், தேர்தல்கள் திணைக்களத்துடனான தொடர்பாடல் ஆவணங்கள் போன்றவற்றில் பொதுச் செயலாளர் ஒப்பமிடப்பட்டு நடைமுறைப்படுத்தல்

7.11.3.6 ஏனைய கட்சிகளுடனான மற்றும் அமைப்புகளுடனான கட்சியின் உறவுகளை பேணுபவராக செயற்படல்

7.11.3.7 கட்சியின் வருடாந்த திட்டத்தை தயாரித்து தலைமைத்துவ சபையின் அங்கீகாரத்தை பெறல்.

7.11.3.8 தலைமைத்துவ சபையின் அங்கிகாரத்தின் பிரகாரம் செய்யப்படுகின்ற உடன்படிக்கைகளில் கைச்சாத்திடல்.

7.11.3.9 கட்சியினது தலைமை அலுவலகத்தின் பிரதம நிர்வாகியாகத் செயற்படல்

7.11.3.10 தலைமைத்துவ சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற விடயங்களை அமுல்படுத்துதல்

7.11.3.11 கட்சியின் பேச்சாளராகவும் தலைமைத்துவ சபையின் இறுதித்தீர்மானங்களை அறிவிப்பவராகவும் செயற்படுதல்

7.11.3.12 கட்சியின் நிதிசார் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல்

7.11.3.13 கட்சியின் பொதுத் தொடர்புகள் வெளிநாட்டுறவுகள் இராஜதந்திர செயற்பாடுகளை பேணுதலும் ஒழுங்கமைத்தலும்

### 7.11.4 உதவிச் செயலாளர் (Deputy Secretary)

7.11.4.1 தலைமைத்துவ சபையின் தீர்மானங்களை அமுல்படுத்துவதற்கும் கட்சியின் ஏனைய நிர்வாகநடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் பொதுச் செயலாளருக்கு உதவியாக செயற்படல்

7.11.4.2 பொதுச்செயலாளர் இல்லாத சந்தர்ப்பங்களில் அவரது பொறுப்புகளையும் கடமைகளையும் கட்சிசார்பாக முன்னெடுத்துச் செல்லல்

### 7.11.5 தேசிய அமைப்பாளர் (National Organizer)

7.11.5.1 கட்சியின் அங்கத்துவ கட்டமைப்புக்கான பொறுப்பாளராகச் செயற்படுதல்

7.11.5.2 தேசிய, மாவட்ட , கிராமிய மட்ட செயற் குழுக்களை அமைத்தல்

7.11.5.3 மாவட்ட ரீதியான அங்கத்தவர் சந்திப்புகளை மேற்கொள்ளல்

7.11.5.4 பெண்கள் இளைஞர்கள் அணி போன்ற கட்டமைப்புகளை தேசிய, மாவட்ட கிராமிய மட்டங்களில் ஒழுங்கமைத்தல்

7.11.5.5 அங்கத்தவர்களுக்கான பயிற்சிகளை ஏற்பாடு செய்தல்

### 7.11.6 பொருளாளர் (Treasurer)

7.11.6.1 கட்சியின் சகல நிதிச்செயற்பாடுகளுக்கும் பொறுப்பாளராக செயற்படுதல்.

5.11.6.2 அனைத்து விதமான வங்கிக்கணக்குகள் நிதிசார் நடவடிக்கைகளுக்கான பிரதம பொறுப்பாளராக செயற்படல்

அவைதொடர்பான சகல எழுத்து மூல ஆவணங்களைப் பேணுதலும் பொறுப்புக்கூறுதலும்

7.11.6.3 கட்சியின் வரவு செலவுத் திட்டத்தை தயாரித்து தலைமைத்துவ சபையின் அங்கீகாரத்தைபெறல்

7.11.6.4 கடசியின் நிதிப்பிரமானங்களுக்கமைய நிதி நடவடிக்கைகள் மேற்கொள்வதை உறுதிசெய்தல்

**7.11.7 உதவிப் பொருளாளர் (Assistant Treasurer)**

7.11.7.1 கட்சியின் நிதி நடவடிக்கைகளில் பொருளாளருக்கு உதவியாக செயற்படுதல்

7.11.7.2 பொருளாளர் இல்லாத சந்தர்ப்பங்களில் கட்சியின் நிதிச் செயற்பாடுகளுக்கு பொறுப்பாளராக செயற்படுதல்

## 8. நிதிச்செயற்பாடுகள்

8.1.1.1 நிதிப்பங்களிப்புகள்

8.1.1. நன்கொடைகள்.

8.1.2 அன்பளிப்புகள்

8.1.3. அங்கத்தவர்களின் பங்களிப்புகள்

8.1.4 அனர்த்த நிவாரண பங்களிப்புகள்

8.1.5. நலன்விரும்பிகளின் பங்களிப்புகள்.

## 8.2 நிதி பயன்பாடுகள்

8.2.1 ரூபா ஒரு இலட்சம் (100,000.00) வரையிலான செலவுகள் தலைவர் அல்லது பொதுச்செயலாளரின் அனுமதியுடன் பொருளாளரால் மேற்கொள்ளப்படும்

8.2.2 ரூபா ஒரு இலட்சம் தொடக்கம் ரூபா ஐந்து இலட்சம் (100,000.00 – 500,000.00) செலவுகள் பதவி நிலை உத்தியோகத்தர்களின் (Office Bearers) எழுத்து

மூலம் அனுமதி பெற்று பொருளாளரால் மேற்கொள்ளப்படல் வேண்டும்

8.2.3 விசேட தேவைகளுக்குரிய நிதி பயன்பாடு தலைமைத்துவ சபையின் பெரும்பான்மை அங்கத்தவர்களின் ஒப்புதலுடன் பயன்படுத்தப்படல் வேண்டும்.

8.2.4 வங்கி கணக்குகள்/காசோலைகள் பொருளாளருடன் தவிசாளர் அல்லது பொதுச்செயலாளரின் கையொப்பத்துடன் நடைமுறைப்படுத்தல் வேண்டும

## 9. நிதி ஆண்டு

9.1 ஜனவரி 01ம் திகதி தொடக்கம் டிசம்பர் 31ம் திகதி வரையானது

9.2 கணக்கறிக்கைகள் ஜனவரி 01ம் திகதியிலிருந்து டிசம்பர் 31ம் திகதிவரைக்குமான காலங்களை உள்ளடக்கியிருக்கும்.

9.3 கணக்காய்வு அறிக்கை உறுப்புரிமை 11 இற்கு அமைவாக வருடாந்தம் மார்ச் 31 இற்குள் நிறைவு செய்யபபடும்

## 10. உள்ளக கணக்காய்வாளர்

10.1 அங்கத்தவர்களிலிருந்து தகுதிவாய்ந்த ஒருவர் உள்ளக கணக்காய்வாளராக கட்சி அங்கத்தவர்களினால் பொதுக்கூட்டத்தில் தெரிவு செய்யப்படுவர்

10.2 கட்சியின் நிதி நிர்வாக செயற்பாடுகள் யாப்பு விதிகளுக்கமையவும் கட்சியின் தீர்மானத்துக்கமைய வும் செயற்படுவதை உறுதிசெய்தல்

10.3 அவர் கூட்டங்களில் வாக்களிக்கும் தகுதியற்றவராவர்

10.4 சகல கூட்டங்களிலும் பங்குபற்றி ஆக்கபூர்வமான கருத்துக்களை தெரிவித்தல்

10.5 கட்சிக்கு விசுவாசமாக செயற்படல்

11. புறநிலைக் கணக்காய்வாளர்.

11.1 தகுதிவாய்ந்த பதிவுசெய்யப்பட்ட கணக்காய்வு நிறுவனம் புறநிலைக் கயக்காய்வாளராக வருடாந்த பொதுக்குட்டத்தில் தெரிவு செய்யப்படுவர்

12 வருடாந்த பொதுக்கூட்டம்

12.1 வருடம் நிறைவடைந்ததும் வருடாந்த செயற்பாடுகள் சம்பந்தமான செயற்பாட்டு அறிக்யையும் நிதி அறிக்கையும் பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படல்

12.2 கட்சியின் தேசியமட்ட வருடாந்த பொதுக்கூட்டமாக பேராளர் மாநாடு அமையும். இதன்போது அந்தந்த மட்டங்களில் வருடாந்த செயலாளர் அறிக்கை பொருளாளர் நிதி அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.

12.3 பேராளர் மாநாட்டுக்கான அழைப்பிதழ் கூட்டம் நடைபெறும் தினத்திற்கு இரண்டு வாரங்களுக்கு முன் அங்கத்தவர்களுக்கு கிடைக்கத்தக்கதாக பொதுச் செயளாளரினால் பொருத்தமான முறையில் அனுப்பப் படல் வேண்டும்

12.4 மாவட்ட, கிராம, நகர, அல்லது உள்ளுராட்சி வட்டார மட்டத்திலான வருடாந்தக் கூட்டம் ஒவ்வொரு வருடமும் நடைபெறும். இதன்போது அந்தந்த மட்டங்களில் வருடாந்த செயளாளர் அறிக்கை பொருளாளர் அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதோடு புதிய உத்தியோகத்தர்களும் தெரிவுசெய்யப்படுவர்

12.5 வருடாந்தப் பொதுக்கூட்டத்துக்கான அழைப்பிதழ் கூட்டம் நடைபெறும் தினத்திற்கு இரண்டு வாரங்களுக்கு முன் அங்கத்தவர்களுக்கு அந்தந்த

மட்டத்திலான செயலாளர்கள் மூலமாக அனுப்பப்படல்வேண்டும்

12.6 வருடாந்த பொதுக்கூட்டம் நடைபெறுவதற்கான நிறைவெண் ஐம்பது (50%) வீதமாகும்

12.7 அவசிய, அவசர தேவை கருதிய விசேட பேராளர் மாநாடு மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் கோரிக்கைக்கு அமைவாக விசேட நிகழ்ச்சி நிரலை மட்டும் உள்ளடக்கி பொதுச் செயலாளரினால் ஒரு வார கால முன் அறிவித்தலுடன் கூட்டப்படும்

## 13. கட்சியின் ஒழுக்கக்கோவை

13.1 கட்சியின் ஒழுக்கக் கோவையை தலைமைத்துவ சபை தயாரித்து நடைமுறைப்படுத்தும்

13.2 கட்சியின் ஒழுக்கக்கோவைக்கு அமைவாக நடப்பது அங்கத்தவர்களுக்கும் பதவிநிலை உத்தியோகத்தர் களுக்கும் கடமையாகும்

13.3 கட்சியின் அங்கத்தவர்களை ஒழுக்கக் கோவைக்கு அமைவாக இடைநிறுத்தவும்நீக்கவும் தலைமைத்துவ சபைக்கு அதிகாரம் உண்டு

## 14. யாப்புக்கான வியாக்கியானமும் இறுதித்தீர்மானமும்

14.1 கட்சியின் யாப்பு தொடர்பான வியாக்கியானமும் நீதித்துறை புனராய்வு அதிகாரமும் தலைமைத்துவ சபைக்கே உரியது.

14.2 கட்சி தொடர்பான சகல விடயங்களிலும் எவ்வகையான பிணக்குகளிலும் தலைமைத்துவ சபையின் தீர்மானமே இறுதித்தீர்மானமாகும்

24

14.3 தலைமைத்துவ சபை அங்கத்தவர்களின் ஐம்பத்தொரு (51%) வீதமான வர்களின் சம்மதத்தின் பேரிலேயே இறுதித் தீர்மானம் செல்லுபடியாகும்

## 15. யாப்புத் திருத்தம்

15.1 ஸ்தாபக அங்கத்தவர்களின் 2/3 (மூன்றில் இரண்டு) பங்கினரது அங்கீகாரத்தின் பேரில் தலைமைத்துவ சபை பிரேரிக்கும்

15.2 தலைமைத்துவ சபையின் யாப்பு திருத்தப் பிரேரணை பேராளர் மாநாட்டின் ஐம்பத்தொரு (51%) வீதமான அங்கத்தவர்களின் சம்மதத்துடன் நிறைவேற்றப்படும்

முற்றும்

M. Chandrakumar

M. Chandrakumar
Ex MP & DCC Parliament
General Secretary
Samaththuva Kadchi